KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 2 No. 02 (2023)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
Vol. 2 No. 02 (2023): Kalanjiyam May 2023

UGC Approved by Transparent Peer Review

ஒயிலாட்டப் பாடல்களில் இராமாயணத் தொன்மங்கள்

Ramayan's Mythological Elements in Oyilattam Songs

Dr. U. Alibava[1*]

[1] Professor and Head, Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli – 620024, Tamil Nadu, India. ORCID: https://orcid.org/0000-0002-2051-7002

*தொடர்புக்கு: alibavapkm@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 12 April 2023
Revised: 17 April 2023
Accepted: 20 April 2023
Published: 01 May 2023

Peer review
Double-blind peer review

Keywords
Oyilattam
Folk Songs
Ramayana
Ravana
Sita
Hanuman
Tamil Folklore
Mythology

ABSTRACT

Oyilattam is one of the traditional folk performing arts prevalent in various parts of Tamil Nadu and among Tamil communities in Sri Lanka. The folk songs associated with this art form serve as valuable sources of indigenous beliefs, customs, cultural practices, and mythological traditions. This article examines the Ramayana myths and characters reflected in Oyilattam songs, with particular emphasis on the portrayal of Ravana. It explores the references to Rama, Sita, Ravana, Hanuman, Surpanakha, and Mandodari as represented in these folk songs. Special attention is given to the episodes of Sita's abduction, the golden deer, Hanuman's journey to Lanka, and the descriptions of Ravana's kingdom. The study reveals how the Ramayana, originally known as an epic narrative, has become an integral part of folk memory and cultural expression. It also highlights how rural communities have incorporated mythological incidents into their songs and artistic traditions, reflecting their understanding of the epic through indigenous perspectives. Thus, Oyilattam songs serve as an important medium for preserving and transmitting Ramayana-related myths and cultural heritage across generations.

How to cite this article: Alibava, U. (2023). ஒயிலாட்டப் பாடல்களில் இராமாயணத் தொன்மங்கள் [Ramayan's Mythological Elements in Oyilattam Songs]. *KALANJIYAM – International Journal of Tamil Studies, 2*(2), 42–47.
Copyright and licence: © 2023 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. https://creativecommons.org/licenses/by/4.0/

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும், இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் இடங்களிலும் ஆடப்பட்டு வருகிற நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்று ஒயிலாட்டம். நாட்டுப்புறக் கலைகளும், நாட்டுப்புறக் கைவினைக் கலைப் பொருட்களும் சிறிது சிறிதாக அருகி வருகிற இன்றைய காலகட்டத்தில் ஒயிலாட்டமும் அருகி வருகிறது. ஒயிலாட்டக் கலைஞர்களும் அருகியே காணப்படுகின்றனர். ஆண்கள் குழுவாக இணைந்து பாடல்கள் பாடி ஆடும் ஆட்டம் ஒயிலாட்டம் எனப்படுகிறது. ஒயிலாட்டப் பாடல்களில் நாட்டார் நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் வெளிப்படுகின்றன.

ஒயிலாட்டம்

'ஒயில்' எனும் சொல்லுக்கு அலங்காரம், ஒய்யாரம், அழகு, சாயல் எனச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி பொருளுரைக்கிறது. "ஒயிலாட்டம் என்பதன் பொருள் அழகுள்ள ஆட்டம்" என்கிறார் தே. சாமுவேல் சுதானந்தா (1991, ப.1). ஒயிலாட்டத்தோடு பாடும் பாட்டை ஒயில்கும்மி என்று தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது. "சில இடங்களில் ஒயிலாட்டத்தையே ஒயில்கும்மி என்கின்றனர். ஒயில்கும்மி எனப் பெயர்பெறும் வடிவம் நளினம் மிகுந்ததென அதனை ஆடுவோர் கருதுகின்றனர்' (தே. சாமுவேல் சுதானந்தா (1991,ப.5). ஒயிலாட்டத்தைப் பற்றித் தனியாக நூலோ, கட்டுரையோ, ஆரம்பக் காலத்தில் வெளிவரவில்லை. ஏ.என். பெருமாள் (1979, ப.28), இ. பாலசுந்தரம் (1983, ப.261), ஜே.ஆர். சுரேந்திரன் (1980, ப.28), நா. வானமாமலை (1978, ப.7), எஸ்.எம்.எல். லெட்சுமணன் செட்டியார் (பதிப்பு ஆண்டு இல்லை, ப. 159), பா. சௌந்தரா (1981, பக்.196-203) ஆகியோர் ஒயிலாட்டத்தின் அமைப்பினையல்லாமல் பாடல்களுக்கு மட்டும் முதன்மையளித்துத் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர்.

மதுரை மாவட்டம் அழகர்கோயிலின் அருகே இருக்கும் சிறிய கிராமம் வலையபட்டி இங்குப் பல தலைமுறைகளாக ஆடப்பட்டு வந்த ஒயிலாட்டத்தின் அமைப்பை மானிடவியல் அணுகுமுறைகளுள் ஒன்றான அமைப்பியல் அணுகுமுறையையும், அதற்குப் பிற்பட்ட வளர்ச்சி நிலைகளைக் கருத்தில் கொண்டும் தே. சாமுவேல் சுதானந்தா ஆட்டமும் அமைப்பும்' எனும் பொருண்மையில் ஆய்வு செய்துள்ளார். அவருடைய ஆய்வை மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை நூலாக வெளியிட்டுள்ளது. இந்நூலில் ஆசிரியரால் பத்து ஒயிலாட்டப் பாடல்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இப்பத்துப் பாடல்களில் வெளிப்படுகின்ற நாட்டார் பண்பாட்டு வெளிப்பாடுகள் தொன்மவியல் சார்ந்து இக்கட்டுரையில் ஆராயப்படவுள்ளன.

நாட்டுப்புற மக்களிடம் பல்வேறு நம்பிக்கைகள் வழக்கத்தில் இருந்தன. அவர்கள் சார்ந்திருக்கும் பொருள்கள், அவற்றின் பயன்பாடுகள், அவை சார்ந்த நம்பிக்கைகள் அவர்களுடைய பாடல்களில் வெளிப்படுகின்றன.

பழைய பனைமரமே ஏன் வளர்ந்தாய் இத்தூரம்
நாட்டார் அறிவாரென்று நான் வளர்ந்தேன் இத்தூரம்
குடிக்கப் பதனியானேன் கொண்டுவிக்க நொங்கானேன்
வண்ணக் கொட்டான் நானானேன் ஒரு
சின்னக் கொட்டான் நானானேன்
உழுகிற ஏர்களுக்கு உழவு கயிறு நானானேன்
எழுகிற வீடுகளுக்கு சொருகோலையும் நானானேன்
தூரத்துப் பெண்களுக்கு தூதோலையும் நானானேன்
ஏழுகசம் கிணத்துக்கொரு இழுகயிறும் நானானேன்

எனப் பனைமரத்தின் பயன்களை ஒவ்வொன்றாக எடுத்துரைத்த இவ் ஒயிலாட்டப் பாடலைப் போன்று நாட்டுப்புற மக்களிடம் வழக்கத்தில் இருந்த புராணம்தொடர்பான தொன்மவியல் சார்ந்த நம்பிக்கைகளும் ஒயிலாட்டப் பாடல்களில் பதிவாகியுள்ளன. குறிப்பாக இராமாயணக் குறிப்புகள் காணப்படுகின்றன.

இராமன்

இராமன் இம்மக்களின் சொந்தத் தெய்வம் இல்லை. எனினும் இராமனை ஊரில் உள்ள தெய்வங்களுக்கெல்லாம் மூத்த தெய்வமாகக் கருதப்படக்கூடிய வழக்கம் இருந்து வருகிறது.

"சாமியாடிகள் தங்கள் மீது அருள் இறங்கியவுடன், 'ஹே ராமா! சாமியாடத் தொடங்குகிறார்கள். இவ்வாறு கூவி அழைப்பது ராமா! கோதண்டராமா!' எனக் கூவி அழைத்துவிட்டுத்தான் ப93). இருப்பினும் மக்கள் இராமனை வழிபடுவதில்லை. இராமன் ஒரு சத்திய வாக்காகக் கருதப்படுகிறது" (ஆட்டமும் அமைப்பும், கதையைக் கேட்பதை மக்கள் ஒத்துக்கொள்ளப்பட்ட கலை நிகழ்ச்சியாகக் கருதினர். ஒயிலாட்டத்தில் இராமாயணக் காட்சிகளை வெளிப்படுத்த இயலாத நிலையில் அவற்றைப் பாடல்களில் வெளிப்படுத்தினர். இராமன் உள்ளிட்ட இராமாயணப் பாத்திரங்களின் பண்புகளும் அப்பாத்திரங்களைப் பற்றிய குறிப்புகளும் ஒயிலாட்டப் பாடல்களில் வெளிப்படுகின்றன.

சீதை

இராமனின் மனைவி சீதையை இராமாயணத்தின் எதிர்நிலைப் பாத்திரமான இராவணன் கடத்திச் சென்றதைப் பதிவு செய்யும் வகையில் ஓர் ஒயிலாட்டப் பாடல் உள்ளது. அப்பாடல்,

'மடமடன்னு மண் கிளம்ப
மணவறையும் உடனெழுப்பி
திடுதிடெனக் கொண்டு போறான்
தென்னிலங்கை ராவணனும்'

என்று சீதை பாடுவதாக அமைந்துள்ளது. மேலும் இப்பாடலில் சீதை,

ஆயர்களே பாலர்களே
ஆடுமேய்க்கும் சிறுவர்களே
ஆதி ரகு ராமர் வந்தால்
அறிந்த சேதி சொல்லிடுங்க
காடை கௌதாரிகளே
கானகத்துப் பட்சிகளே
எந்தன் காவல் கணவர் வந்தால்
கண்ட சேதி சொல்லிடுங்க

என்று அங்கிருந்த மக்களிடமெல்லாம் தம் கணவர் இராமர் வந்தால் தெரிவிக்குமாறு வேண்டுகிறாள். மக்களிடம் மட்டுமல்லாது காடை, கௌதாரி கானகத்துப் பறவைகள் போன்ற அஃறிணை உயிர்களிடமும் வேண்டுவதாக இப்பாடல் பாடப்பட்டுள்ளது. யார் கடத்திச் சென்றவர்கள் என்பதை இராமனிடம் கடத்திச் சென்றவர்கள் என்பதை இராமனிடம் தெரிவிப்பதற்காகக் கடத்திச் சென்ற இராவணனின் தோற்ற அடையாளத்தையும் சீதை,

காலோ கனக நிறம்
கணுக்காலோ பச்சை நிறம்
மேலோ பவள நிறம்
மேனியெல்லாம் தங்க நிறம்
மடமடன்னு மண் கிளம்ப
மணவறையும் உடனெழுப்பி
திடுதிடெனக் கொண்டு போறான்
தென்னிலங்கை ராவணனும்

என்று இப்பாடலில் நயம்படத் தெரிவிக்கிறாள். இவ் ஒரே பாடலில் இராமன், சீதை, இராவணன் போன்ற மூவரைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன.

சீதை இராமனுடன் ஆரண்யத்தில் தங்கி இருக்கிறாள். அப்போது இராவணன் சீதையைக் கவரும் பொருட்டு மாரீசன் என்னும் மாயமானை அனுப்பிச் சீதையின் மனதில் மானின் மீதான ஆசையைக் கிளப்புகிறான். அப்போது அந்த மான் வேண்டுமெனச் சீதை வேண்டுகிறாள். இந்நிகழ்வு ஒயிலாட்டப் பாடலொன்றில்,

ஆசை மன்னவரே மான் மீதிலே நான்
எண்ண மிகுந்தாசை கொண்டேன்
அங்கமெலாந் தங்க நிறம் அது
அமைந்திட்ட திரு உருவம்
தாவி விளையாடுவது பார் அது
தாருகாவனம் ஓடுது பார்
துள்ளி விளையாடுது பார் வனச்
சோலைதனில் ஓடுது பார்
வாசலிலே கண்ட மானை பிடித்து
ஆசை தீரத்; தந்திடுவாய்

என்று பதிவாகியுள்ளது.

இராவணன்

இராமாயணத்தின் எதிர்நிலைப் பாத்திரமான இராவணனைப் பற்றிய குறிப்புகள் பல இடங்களில் வெளிப்படுகின்றன. அனுமன் சீதையைத் தேடித்

தென்னிலங்கை சென்ற போது, தான் அங்கு கண்டவற்றையெல்லாம் ஒரு பாடலில் எடுத்துரைக்கின்றான்.

பாய்ந்து கடல் தாண்டி வந்தேன்
பாங்குடனே லங்கை நான்
பாரடைந்த ராமர் பாதம்
பணிந்து வந்தேன் இங்கு நான்
ரத்தினம் பதித்ததோர்
கொலு மண்டபம் கண்டேன் நான்
ராவணன் படுத்துறங்கும்
நச்சபடி கண்டேன் நான்
கருத்துடனே எந்தன் தாயே
காண வந்தேன் இங்கு நான்
கதரக் கோட்டை எங்கும் தேடி
காணாது மனம் நொந்தேன் நான்
செம்பு வெள்ளிக் கோட்டை எங்கும்
சென்று உள்ளே தேடினேன்
சிங்கார மாளிகை கண்டு
திரும்பி மனம் வாடினேன்

இப்பாடலில் அனுமன் தான் இலங்கை சென்ற போது இராவணன் படுத்துறங்கும் நச்சபடியைக் கண்டதாகவும் கூறுகிறான். 'பண்டாரக் கோலமது கொண்டேனே ராவணன் பாத குறடதிலே நின்றேனே' என ஒரு பாடலிலும் 'ராவணன் தங்கை நீயே என ஒரு பாடலில் சூர்ப்பனகையைக் குறிக்குமிடத்தும் இராவணனைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

பிறமாந்தர்கள்

இராமாயணக் கதைமாந்தர்களில் 'சாதம் கொண்டு போறேனங்கே தாயரான சூர்ப்பனகை' என இராவணனின் தங்கை சூர்ப்பனகை குறிப்பிடப் பெறுகிறாள். 'மாட மாளிகை விட்டுக் கடந்தேனே - நான் மண்டோதரியை விட்டுப் பிரிந்தேனே' என இராவணனின் மனைவி மண்டோதரி ஒரு பாடலில் குறிக்கப் பெறுகிறாள்.

இலங்கை நகர்

இராவணனின் தலைநகரான தென்னிலங்கை தண்டு கமண்டலம் கைகொண்டேனே - சிவ தென்னிலங்கையை விட்டுப் பிரிந்தேனே எனவும் 'இலங்கை நகர் செல்லு, இராவணனிடம் சொல்லு' எனவும், 'பாய்ந்து கடல் தாண்டி வந்தேன் பாங்குடனே லங்கை நான்' எனவும் 'திடுதிடெனக் கொண்டு போறான் தென்னிலங்கை ராவணனும்' எனவும் ஒயிலாட்டப் பாடல்களில் குறிப்பிடப்பெறுகிறது.

நாட்டார் பாடல்களில் மக்கள் வாழ்க்கையும் அவர்கள் வாழும் மண் சார்ந்த நம்பிக்கைகளும் பதிவாகியுள்ளன. நாட்டுப்புற மக்களுடைய வாழ்க்கையில் இராமாயணம் மற்றும் மகாபாரதக் கதைக் குறிப்புகள் இயல்பாகப் புழக்கத்தில் இருந்தன. ஏதேனும் ஒன்றைக் குறிப்பதற்கும் அதை அவர்கள் எளிதில் புரிந்து கொள்வதற்கும் நாட்டுப்புற மக்கள் புராணம் சார்ந்த தொன்மவியல் நிகழ்வுகளைத் தங்கள் வாழ்விலும் பேச்சிலும் பயன்படுத்தினர். அது அவர்களுடைய கலைகளிலும் வெளிப்பட்டன. அவ்வகையில் நாட்டார் பாடல்களுள் ஒன்றான ஓயிலாட்டப் பாடல்களிலும் இராமாயணத் தொன்மங்களும், பாத்திரங்களும் பற்றிய குறிப்புகள் பதிவாகியுள்ளன.

துணை நூல்கள்:

1. சாமுவேல் சுதானந்தா, தே. (1991), ஆட்டமும் அமைப்பும் ஒரு நாட்டுப்புற நிகழ்கலை பற்றிய ஆய்வு, மதுரை : மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
2. சுரேந்திரன், ஜே.ஆர். (1980), தமிழகக் கிராமிய நடனங்கள், மதுரை :ஓம் பெரியசாமி புராதன கிராமிய நடனக்கலைக்குழுப் பயிற்சி நிலையம்.
3. சௌந்தரா, பா.(1981), ஓயிலாட்டம், தூத்துக்குடி : திருமகள் நூலகம்.
4. பெருமாள், ஏ.என். (1979), தமிழ் நாடகம் ஓர் ஆய்வு, சென்னை: தமிழ்ப் பதிப்பகம்.
5. வானமாமலை, நா. (1978), தமிழர் பண்பாடும் தத்துவமும், சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.
6. Lakshmanan Chettiar, S.M.L., (year not known), Foklore of Tamil Nadu, New Delhi: National Book Trust of India.